**எண்**: 63/2023 **நாள்**: 14.08.2023

**<u>தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்</u>**

**<u>எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை – 600 003</u>**

**<u>செய்தி வெளியீடு</u>**

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-IV (தொகுதி-IV) பணிகளில் அடங்கிய தட்டச்சர் பதவிக்கு நேரடி நியமனம் செய்யும் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், 30.03.2022 நாளிட்ட அறிவிக்கை எண்.07/2022-இன் வாயிலாக விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. இப்பதவிக்கான எழுத்துத்தேர்வு கடந்த 24.07.2022 **மு.ப** அன்று நடைபெற்று, எழுத்துத்தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண் மற்றும் தரவரிசை விவரங்கள் 24.03.2023 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டன.

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-IV (தொகுதி-IV) பணிகளில் அடங்கிய **தட்டச்சர்** பதவிக்கான **சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு 21.08.2023 முதல் 11.09.2023 வரை** (ஞாயிறு, ஓணம் (29.08.2023) மற்றும் கிருஷ்ண ஜெயந்தி (06.09.2023) நீங்கலாக) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், எண்.3, தேர்வாணையச் சாலை (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்), சென்னை-600 003-ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை எண் / இடஒதுக்கீட்டு விதி மற்றும் இப்பதவிக்கான காலிப்பணியிடங்களின் அடிப்படையில் தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான நாள், நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய அழைப்புக்கடிதத்தினை விண்ணப்பதாரர்கள் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in-லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். கலந்தாய்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு, அதற்கான விவரம் குறுஞ்செய்தி (SMS) மற்றும் மின்னஞ்சல் (e-mail) மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். **சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான அழைப்பாணை தனியே தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது** எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு பங்கேற்க அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் எழுத்துத்தேர்வில் அவரவர் பெற்ற மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை / இடஒதுக்கீட்டு விதிகள் / விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மற்றும் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படுவர். எனவே, சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் அனைவரும் கலந்தாய்விற்கு அனுமதிக்கப்பட்டு பணி நியமனம் வழங்கப்படும் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பதாரர்கள் மேற்படி சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு குறிப்பிடப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் வரத்தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பி.உமா மகேஸ்வரி, இ.ஆ.ப.,
செயலாளர்

**No: 63/2023** **Date: 14.08.2023**

# TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION
## No.3, TNPSC Road – Chennai 600 003
## Press Release

The Tamil Nadu Public Service Commission in its Notification No.**07/2022**, dated 30.03.2022 had invited applications for selection of candidates for appointment by direct recruitment to the post of Typist included in Combined Civil Services Examination-IV (Group-IV Services). The Written examination was held on **24.07.2022 FN** and results were published on **24.03.2023**. In order to verify the genuineness of claims of the candidates made in their online applications regarding age, educational qualification, community, experience etc., and to fill the vacancies notified for the said post, the **Physical Certificate Verification and Counselling** for the post of **Typist** included in Combined Civil Services Examination-IV (Group-IV Services) is scheduled to be held from **21.08.2023 to 11.09.2023** (except Sundays, Onam (29.08.2023) and Krishna Jayanthi (06.09.2023)) at the O/o. Tamil Nadu Public Service Commission, No.3, TNPSC Road, (Near Broadway Bus Stand and Fort Railway Station), Chennai–600 003.

The list of candidates who have been admitted provisionally for Physical Certificate Verification and Counselling shortlisted based on merit, overall rank, rule of reservation of appointments and number of vacancies have been hosted on the Commission's website. The candidates should bring all essential original certificates as per the claims made in their online application. Candidates are hereby informed to download the Memorandum of Admission to certificate verification and counselling through the Commission's website viz **www.tnpsc.gov.in** and also directed to attend the Physical Certificate Verification and Counselling on the scheduled date / time without fail. The candidates will be informed through SMS and Email only. **Memorandum of admission to certificate verification and counselling to the candidates will not be sent by post.**

The allotment to the post is strictly subject to availability of vacancies in their respective reservation categories when they reach their turn as per their rank, rule of reservation and subject to their eligibility. Therefore, the candidates called for Physical Certificate Verification are not assured of being admitted to Counselling.

Candidates who do not appear for Physical Certificate Verification and Counselling on the scheduled date and time allotted to them will lose their opportunity in the combined merit list and they will not be given any further chance to appear for the same.

P.Uma Maheswari, I.A.S.,
Secretary